**பட்டியல் வகுப்பினர் பழங்குடியினருக்கான (வன்கொடுமை தடுப்பு)**

**சிறப்பு நீதிமன்றம், திருவாரூர்.**

**முன்னிலை: திரு. M. வடிவேல், பி.காம்., பி.எல்.,**

அமர்வு நீதிபதி பட்டியல் வகுப்பினர் மற்றும்

பழங்குடியினருக்கான(வன்கொடுமை தடுப்பு)

சிறப்பு நீதிமன்றம், திருவாரூர்.

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27-ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 03/2025**

**[CNR.NO.TNTV16-000143-2025]**

(தஞ்சாவூர் முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண். 03/2019

[CNR.NO.TNTJ09000344-2019]

மன்னார்குடி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 2

ஆண்டு பட்டிகை வழக்கு எண். 115/2017)

| | |
|---|---|
| புகார்தாரரின் பெயர் | தமிழ்நாடு அரசுக்காக<br>காவல் துணை கண்காணிப்பாளர்,<br>மன்னார்குடி உட்கோட்டம்,<br>தலையாமங்கலம் காவல் நிலைய<br>குற்ற எண். 02/2017. |
| குற்றம் சாட்டப்பட்டவர்களின் பெயர்கள் | **1. மலையரசன்**, (வயது 32/2026)<br>த/பெ. ரவிச்சந்திரன்,<br>பாரதியார் தெரு, 57 ஏத்தக்குடி.<br>மன்னார்குடி தாலுக்கா,<br>திருவாரூர் மாவட்டம்.<br>**2. சுந்தர்**, (வயது 34/2026)<br>த/பெ. முத்துசாமி,<br>பாரதியார் தெரு, ஏத்தக்குடி.<br>மன்னார்குடி தாலுக்கா,<br>திருவாரூர் மாவட்டம். |

| | |
|---|---|
| | **3. விஜயகுமார்**, (வயது 31/2026)<br>த/பெ. ஆறுமுகம்,<br>பாரதியார் தெரு, 57 ஏத்தக்குடி.<br>மன்னார்குடி தாலுக்கா,<br>திருவாரூர் மாவட்டம்.<br><br>**4. அருள்தாஸ்**, (வயது 31/2026)<br>த/பெ. ரவிச்சந்திரன்,<br>பாரதியார் தெரு, 57 ஏத்தக்குடி.<br>மன்னார்குடி தாலுக்கா,<br>திருவாரூர் மாவட்டம். |
| எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் விபரம் | **1-ம் எதிரி மீதான குற்றச்சாட்டுகள்:**<br>ச/பி. 294(b), 324 (7 எண்ணிக்கை), 506(ii) இ.த.ச வின் கீழும்.<br>**2 முதல் 4 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள்:**<br>ச/பி. 294(b), 324 (7 எண்ணிக்கை) இ.த.ச வின் கீழும். |
| எதிரிகள் காவலில் அடைக்கப்பட்ட நாள் | 1 முதல் 4 எதிரிகள் கடந்த 02.01.2017-ம் தேதியன்று காவலில் அடைக்கப்பட்டு கடந்த 05.01.2017-ம் தேதியன்று பினை மனு தாக்கல் செய்து பிணையில் சென்றுள்ளார்கள். |
| புகார் வாக்குமூலம் கொடுக்கப்பட்ட நாள் | 01.01.2017 |

| | | |
|---|---|---|
| இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 03.07.2017 | |
| கு.வி.மு.ச பிரிவு 240- ன் கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 22.12.2020 | |
| கு.வி.மு.ச பிரிவு 311-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட பலவகை மனுக்கள் மற்றும் அதன் மீதான உத்தரவுகள். | அ.சா-1 மற்றும் 2 ஆகியோர்களை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி மனு கடந்த 04.03.2026 ஆம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது. | |
| **சாட்சிகள்** | **மு.வி.** | **கு.வி.** |
| அ.சா.1 துரையரசன் - புகார்தாரர் | 05.04.2022 | 11.05.2022<br>04.03.2026 |
| அ.சா.2 குமரவேல் | 05.04.2022 | 11.05.2022<br>04.03.2026 |
| அ.சா.3 ஜீவானந்தம் | 11.05.2022 | 11.05.2022 |
| அ.சா.4 அருள்கொடி | 25.07.2022 | 09.03.2026 |
| அ.சா.5 விக்னேஷ் | 25.07.2022 | 04.03.2026 |
| அ.சா.6 ராஜேந்திரன் | 15.10.2022 | 15.10.2022 |
| அ.சா.7 தெய்வநாயகி - வட்டாட்சியர் | 26.10.2022 | இல்லை |
| அ.சா.8 கீர்த்திவாசன் - மருத்துவர் | 18.11.2022 | 18.11.2022 |
| அ.சா.9 ராஜேந்திரன் - காவல் உதவி ஆய்வாளர் | 10.03.2025 | 10.03.2025 |
| அ.சா.10 குணசேகரன்- காவல் துணை கண்காணிப்பாளர் | 19.03.2025 | 19.03.2025 |

| | |
|---|---|
| பா.நா.சு.ச பிரிவு 351-ன் கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 02.04.2025 |
| எதிரிகள் தலைமறைவான நாள் மற்றும் ஆஜர்படுத்தப்பட்ட விபரம் | --- |
| குற்றம் சாட்டப்பட்டவர்களின் கூற்று | குற்றவாளிகள் இல்லை |
| நீதிபதியின் தீர்மானம் | எதிரிகள் குற்றவாளிகள் இல்லை. |
| நீதிபதியின் தீர்ப்பு | **முடிவாக**, 1-ம் எதிரி மீது ச/பி. 294(b), 324 (7 எண்ணிக்கை), 506(ii) இ.த.ச வின் கீழும். 2 முதல் 4 எதிரிகள் மீது ச/பி. 294(b), 324 (7 எண்ணிக்கை) இ.த.ச வின் கீழ் வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்பதால், 1 முதல் 4 எதிரிகள் மேற்படி சட்டப்பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, மேற்படி குற்றச் சாட்டுகளிலிருந்து எதிரிகளை பா.நா.சு.ச பிரிவு 258-ன் படி விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br>இவ்வழக்கில் தடயப் பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. |

இவ்வழக்கு கடந்த 25.03.2026 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது அரசுக்காக சிறப்பு அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திரு.M.செந்தில்நாதன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. B. டில்லிபாபு அவர்கள் ஆஜராகி செய்த இரு தரப்பு வாதுரைகளை கேட்டு, வழக்கு ஆவணங்களை பரிசீலித்த பின்னர் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

## தீர்ப்புரை

1. **அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்**:

இவ்வழக்கின் அ.சா.1 துரையரசன் மற்றும் இவரை சார்ந்த வழக்கில் காயம்பட்ட அனைவரும் ஏத்தக்குடி மேலகுடியிருப்பில் வசிப்பவர்கள் ஆவார்கள். எதிரிகள் அனைவரும் ஏத்தக்குடி பாரதியார் தெருவை சேர்ந்தவர்கள் ஆவார்கள். கடந்த 01.01.2017-ம் தேதி அதிகாலை 12.30 மணிக்கு ஏத்தக்குடி பாரதியார் தெருவுக்கு போகிற ரோட்டில் மேல்புறம் அ.சா.1 ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு எதிரிகள் சத்தம்போட்டு ஆராவாரம் செய்து கூச்சலிட்டு கொண்டு நின்றதும் ஏண்டா இங்க வந்து சத்தம் போடுறீங்க என்று அ.சா.1 மற்றும் அவரை சார்ந்தவர்கள் சொன்னதும் எதிரிகள் அனைவரும் ஒன்றுகூடி அப்படிதான் செய்வோம் என கூறி தெருவில் குளவை சுண்ணாம்பை வாலியில் எடுத்து வந்து எழுதவந்தபோது அ.சா.1 எழுதக்கூடாது என சொன்னதும் எதிரிகள் நாங்க ஜாலியா இருக்கிறது இந்த புண்டை மகன்களுக்கு பிடிக்கல என திட்டிக்கொண்டு கற்களை எடுத்து ஆள் ஆளுக்கு எடுத்து வீசி அடித்ததில்

சாட்சி 1-க்கும் அவரை சேர்ந்தவர்களுக்கும் உடம்பில் ரத்த காயமும் வீக்க காயமும் ஏற்பட்டுள்ளது. அ.சா.1 சத்தம் போடவே அக்கம் பக்கம் உள்ளவர்கள் ஓடி வந்ததும் 1ம் எதிரி கட்டையை காட்டி இன்னைக்கு தப்பிச்சிட்டீங்க என்னைக்கு இருந்தாலும் உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என மிரட்டி அ.சா-1க்கும் அவரை சார்ந்தவர்களுக்கும் ஏற்பட்ட காயம் சொற்ப காயங்கள் என்று 1 முதல் 4 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 148, 294(b), 324, 506(ii)-ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டுமென இறுதி அறிக்கையினை தலையாமங்கலம் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் தாக்கல் செய்துள்ளார்.

**2.** மேற்படி இறுதி அறிக்கை முதலில் மன்னார்குடி நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 2 இல் தாக்கல் செய்யப்பட்டு, அந்நீதிமன்றத்தில் ஆண்டு பட்டிகை வழக்கு எண்.115/2017 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு சம்பவத்துடன் தொடர்புடைய எதிர் தரப்பு வழக்காக மேற்படி காவல் நிலைய குற்ற எண்.24/2017 என்ற எண்ணில் வழக்கு பதிவு செய்யப்பட்டு அந்த வழக்கில் இறுதி அறிக்கையானது தஞ்சாவூர், முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, அந்த நீதிமன்றத்தில் சிறப்பு அமர்வு வழக்கு எண். 137/2017 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வந்துள்ளது. இந்த விபரத்தின் அடிப்படையில் மேற்சொன்ன ஆண்டு பட்டிகை வழக்கானது ஒரே நீதிமன்றத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அதனால் மேற்படி ஆண்டு பட்டிகை வழக்கு எண்.115/2017-யை தஞ்சாவூர், முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி

வைக்க வேண்டும் என மன்னார்குடி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்2 ல் கு.வி.மு.ச பிரிவு 323 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அந்த மனு மேற்படி நீதிமன்றத்தில் கு.ப. ம.எண். 2160/2019 என்ற எண்ணில் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து மேற்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் மேற்படி இந்த வழக்கு தஞ்சாவூர், முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு தஞ்சாவூர், முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் ஆண்டு பட்டிகை வழக்கு எண். 03/2019 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. பின்னர் 1 முதல் 4 எதிரிகள் மேற்படி நீதிமன்றத்தில் ஆஜரான பின்னர் அவர்களுக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. பின்னர் வழக்கு கோப்பை பரிசீலித்தும் எதிரிகள் மற்றும் அரசு குற்றத்துறை வழக்கறிஞரின் வாதங்களைக் கேட்டறிந்தும் 1-ம் எதிரி மீது ச/பி. 294(b), 324 (7 எண்ணிக்கை), 506(ii) இ.த.ச வின் கீழும். 2 முதல் 4 எதிரிகள் மீது ச/பி. 294(b), 324 (7 எண்ணிக்கை) இ.த.ச வின் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து, தமிழில் படித்துக்காட்டி விளக்கி கூறி வினவியபோது எதிரிகள் குற்றசாட்டுகளை மறுத்துள்ளார்கள். இதனை தொடர்ந்து அரசுத்தரப்பு சாட்சிகள் விசாரணைக்காக மேற்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

**3.** தஞ்சாவூர், முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையிலிருக்கும் போது இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா-1 முதல் அ.சா-10 வரை சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு அ.சா.ஆ-1 முதல் அ.சா.ஆ-17

வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிகளுக்கு எதிராக உள்ள சாட்சியங்களை கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ்வினா எழுப்பப்பட்டபோது எதிரிகள் அரசு தரப்பு சாட்சியங்களை பொய் என தெரிவித்துள்ளனர். மேலும் தங்களது தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் உள்ளது என தெரிவித்துள்ளனர். இருந்தபோதிலும் சாட்சியங்களாக யாரும் விசாரணை செய்யப்படவில்லை.

**4.** இந்த வழக்கு தஞ்சாவூர், முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் நிலுவையிலிருந்தபோது, திருவாரூர் மாவட்டத்தில் புதிதாக பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின் கீழான வழக்குகளை விசாரிப்பதற்கான இந்த புதிய நீதிமன்றம் கடந்த 19.07.2025 ம் தேதியன்று உருவாக்கப்பட்டதை தொடர்ந்து, இந்த வழக்குடன் எதிர் வழக்காக சொல்லப்பட்டுள்ள தற்போது இந்நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள SSC.No.81/2025 என்ற வழக்கு இந்த நீதிமன்றத்திற்கு வரப்பெற்றுள்ள காரணத்தினால் என்பதால் மேற்படி இவ்வழக்கு இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு, மேற்படி இவ்வழக்கு கோப்பு இந்நீதிமன்றத்திற்கு வந்தவுடன் புதிதாக வழக்கு எண் CC No. 3/2025 என எண் கொடுக்கப்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**5.** இந்நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையானவுடன் இவ்வழக்கில் எதிரிகள் தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டது. பின்னர் இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது.

**6.** இவ்வழக்கில் உள்ள ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அரசு தரப்பில் அ.சா-1 முதல் அ.சா.10 வரை சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ-1 முதல் அ.சா.ஆ-17 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. தடயப் பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**7. அரசுத்தரப்பு சாட்சியங்களின் சாராம்சம்:**

**(i) அ.சா.1 துரையரசன், அ.சா.2 குமரவேல், அ.சா.3 ஜீவானந்தம், அ.சா.4 அருண்கொடி, அ.சா.5 விக்னேஷ்** ஆகியோர்கள் சாட்சியத்தின்படி இவர்கள் அனைவரும் மன்னார்குடி காவல் சரகத்திற்குபட்ட ஏத்தங்குடியில் வசித்து வருகிறார்கள். கடந்த 31.12.2016-ம் தேதி இரவு 12.00 மணியளவில் அ.சா.1 வீட்டிற்கு அருகாமையில் வெடிசத்தம் கேட்டுள்ளது அப்போது, அ.சா.1 வெளியே வந்து பார்த்தபோது 1 முதல் 4 எதிரிகள் மற்றும் சிலர் பீர் பாட்டில்களுடன் அங்கு நின்றுகொண்டு நாங்கள் அப்படித்தான் சத்தம்போடுவோம் என்று சொல்லியுள்ளனர். அந்த நேரத்தில் மேற்படி சத்தத்தை கேட்டு அ.சா.2 குமரவேல், அ.சா.3 ஜீவானந்தம், அ.சா.4 அருண்கொடி, அ.சா.5 விக்னேஷ் ஆகியோர்கள் வந்துள்ளனர். எதிரிகள் கையில் பெயிண்ட் வாலியை வைத்துக்கொண்டு மீண்டும் சத்தம் போட்டுக்கொண்டு கெட்ட வார்த்தைகளால் திட்டிக்கொண்டிருந்தார்கள். அங்கு கோவில் கட்டுவதற்காக வைத்திருந்த

கற்கலை எடுத்து சாட்சிகள் மீது வீசியுள்ளனர். இதனால் சாட்சிகளுக்கு காயம் ஏற்பட்டுள்ளது. அப்போது ஊர்மக்கள் அங்கு திரண்டுவிட்டனர். அப்பொழுது 1-ம் எதிரி ஒரு கட்டையை எடுத்து அ.சா.1-ஐ பார்த்து இந்த தடவை நீ தப்பித்து விட்டாய் அடுத்த தடவை நீ தப்பிக்க முடியாது என்று கூறியுள்ளார். காயம்பட்ட சாட்சிகள் மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றுள்ளனர். அங்கு வந்த போலிசாரிடம் இந்த அ.சா.1 ஆனவர், அ.சா.ஆ.1 ஆன புகார் வாக்குமூலம் அளித்துள்ளார்.

**(ii)** **அ.சா.9 ராஜேந்திரன்** இவர் காவல் உதவி ஆய்வாளராக தலையாமங்கலம் காவல்நிலையத்தில் கடந்த 01.01.2017-ம் தேதி பணியில் இருந்தபோது அ.சா.1 ஆன துரைராஜ் என்பவர் மன்னார்குடி மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் மருத்துவமனைக்கு சென்று அவரிடம் அ.சா.ஆ-1 ஆன புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து நிலைய குற்ற எண்.02/2017-ல் இ.த.ச பிரிவுகள் 147, 148, 294(பி), 324 மற்றும் 506(2)-ன் கீழ் அ.சா.ஆ.16 ஆன முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.

**(iii)** **அ.சா.10 குணசேகரன்,** காவல் துணை கண்காணிப்பாளர், மன்னார்குடி உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளராக கூடுதல் பொறுப்பில் பணிபுரிந்தபோது இந்த வழக்கில், தனக்கு முன்னதாக காவல் துணை கண்காணிப்பாளர் ரவிச்சந்திரன் என்பவர் இவ்வழக்கில் புலன்விசாரணை மேற்கொண்டுள்ளதை பார்வையிட்டுள்ளார். பின்னர், இவ்வழக்கினை இவர்

புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இவ்வழக்கில் காயம்பட்டிருந்த சாட்சிகளான அ.சா.1 துரையரசன், அ.சா.5 விக்னேஷ், அ.சா.3 ஜீவானந்தம், அ.சா.2 குமரவேல், அ.சா.4 அருள்கொடி மற்றும் தமிழரசன், அழகர் ஆகியோர்களுக்கு சிகிச்சையளித்த மருத்துவர் **அ.சா.8 கீர்த்திவாசன்** என்பவரை விசாரணை செய்து அ.சா.1, அ.சா.5, அ.சா.3, அ.சா.2, அ.சா.4, சாட்சிகள் தமிழரசன் மற்றும் அழகர் ஆகியோர்களுக்கு உரிய அ.சா.ஆ.9 முதல் அ.சா.ஆ.15 வரையிலான விபத்து பதிவேடுகளை பெற்றுள்ளார்.

**(iv)** அ.சா-10 மேலும், மன்னார்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரிந்த துணை வட்டாட்சியரான **அ.சா.7 தெய்வநாயகி** என்பவரை விசாரணை செய்து அ.சா.1 துரையரசன், அ.சா.2 குமரவேல், அ.சா.5 விக்னேஷ், வெங்கடேசன், செந்தில், தமிழரசன் ஆகியோர்களுக்குரிய **அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சாதி சான்றிதழ்களை** பெற்று இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா.9 -ஐ விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து புலன்விசாரணை முடித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**(v)** இவ்வழக்கில் அரசு தரப்பில் சாட்சியமாக விசாரணை செய்யப்பட்டுள்ள **அ.சா.6 ராஜேந்திரன்** என்பவர் கடந்த 01.01.2017-ம் தேதி மாலை 05.45 மணிக்கு காவல் துறையினர் ஏத்தங்குடிக்கு வந்து சண்டை நடந்த இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்யத போது உடன் இருந்தாக சாட்சியமளித்துள்ளார்.

**8.** தஞ்சை நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையிலிருந்தபோது இவ்வழக்கில் அரசுத்தரப்பு சாட்சியங்கள் முடிந்த பிறகு, அதில் எதிரிகளுக்கு பாதகமாக உள்ள சங்கதிகளைப் பொறுத்து கு.வி.மு.ச பிரிவு 313 (1)(b)-ன் கீழ் வினவியபோது, பொய் சாட்சிகள் என்றும், இவ்வழக்கு பொய் வழக்கு என்றும், தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உள்ளது என கூறியுள்ளனர். ஆனால் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை என்பது ஆவணங்களில் இருந்து தெரிய வந்துள்ளது.

**9.** இவ்வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில், அரசுத்தரப்பில் 1-ம் எதிரி மீது ச/பி. 294(b), 324 (7 **எண்ணிக்கை**), 506(ii) இ.த.ச வின் கீழும். 2 முதல் 4 எதிரிகள் மீது ச/பி. 294(b), 324 (7 **எண்ணிக்கை**) இ.த.ச வின் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதாகும்.

**10.** இரு தரப்பு வாதங்களும் நன்கு கேட்பட்டது. சாட்சி சான்றாவணங்கள் அனைத்தும் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

**11. <u>தீர்வு</u>:-**

இவ்வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்டதாக அரசு தரப்பில் சொல்லப் பட்டுள்ள அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் முதல் விசாரணை சாட்சியங்களில், எதிரிகள் சம்பவ இடத்தில் இருந்து கற்கலை தங்கள் மீது வீசினார்கள் என்று கூறியுள்ளனர். ஆனால், குறுக்கு விசாரணையில் சம்பவம் நடந்த இடத்தில் எதிரிகள் இருந்தார்கள் என்று என்னால் சொல்ல இயலாது

என்று சொன்னால் ஆமாம் என்று கூறியுள்ளனர். முதல் விசாரணை சாட்சியத்திற்கு முரண்பாடாக அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சியங்கள் கூறியுள்ளதை பார்க்கும் போது சம்பவ நேரத்தில் இந்த எதிரிகள் தான் அங்கிருந்து இந்த சாட்சிகளை தாக்கினார்களா என்பது சந்தேகத்திற்கு இடமாக உள்ளது. இவ்வாறான நிலையில், இவ்வழக்கினை பதிவு செய்த அ.சா.9 ஆன காவல் உதவி ஆய்வாளர் மற்றும் இவ்வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ள அ.சா.10 ஆன காவல்துணை கண்காணிப்பாளர் ஆகியோர்களின் சாட்சியங்களை அடிப்படையாக கொண்டு இந்த எதிரிகள் குற்றம் இழைத்துள்ளார்கள் என சட்டத்தின் பால் முடிவு செய்ய இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

12. மேற்கண்டவாறு சாட்சிகள் சான்றாவணங்களை பரிசீலனை செய்ததில் இவ்வழக்கில் உள்ள எதிரிகளின் தான் மேற்படி குற்றசம்பத்தில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்ய தவறியதன் காரணமாக சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு வழங்கிட இந்நீதிமன்றம் கருதுகிறது.

**முடிவாக**, 1-ம் எதிரி மீது ச/பி. 294(b), 324 (7 எண்ணிக்கை), 506(ii) இ.த.ச வின் கீழும், 2 முதல் 4 எதிரிகள் மீது ச/பி. 294(b), 324 (7 எண்ணிக்கை) இ.த.ச வின் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்பதால், 1 முதல் 4 எதிரிகள் மேற்படி சட்டப்பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று

முடிவு செய்து, மேற்படி குற்றச் சாட்டுகளிலிருந்து எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 248-ன் படி விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

இவ்வழக்கில் தடயப் பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இத்தீர்ப்புரை முழுவதும் என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு மார்ச் 27 -ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.27 18:59:20 +0530

அமர்வு நீதிபதி,
பட்டியில் வகுப்பினர் மற்றும் பழங்குடியினர்
(வன்கொடுமை தடுப்பு)
வழக்குகளை விசாரிப்பதற்கான
சிறப்பு நீதிமன்றம், திருவாரூர்.

**அரசுத்தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| அ.சா-1 | துரையரசன் - புகார்தாரர் |
| அ.சா-2 | குமரவேல் |
| அ.சா-3 | ஜீவானந்தம் |
| அ.சா-4 | அருள்கொடி |
| அ.சா-5 | விக்னேஷ் |
| அ.சா-6 | ராஜேந்திரன் |

| | |
|---|---|
| அ.சா-7 | தெய்வநாயகி - வட்டாட்சியர் |
| அ.சா-8 | கீர்த்திவாசன் - மருத்துவர் |
| அ.சா-9 | ராஜேந்திரன் - காவல் உதவி ஆய்வாளர் |
| அ.சா-10 | குணசேகரன்- காவல் துணை கண்காணிப்பாளர் |

**அரசுத்தரப்பு சான்றாவணங்கள்:-**

| | |
|---|---|
| அ.சா.ஆ-1 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ-2 | சாதி சான்றிதழ் (துரையசன்) |
| அ.சா.ஆ-3 | சாதி சான்றிதழ் (விக்னேஷ்) |
| அ.சா.ஆ-4 | சாதி சான்றிதழ் (வெங்கடேசன்) |
| அ.சா.ஆ-5 | சாதி சான்றிதழ் (குமரவேல்) |
| அ.சா.ஆ-6 | சாதி சான்றிதழ் (செந்தில்) |
| அ.சா.ஆ-7 | சாதி சான்றிதழ் (தமிழரசன்) |
| அ.சா.ஆ-8 | சாதி சான்றிதழ் (அழகர்) |
| அ.சா.ஆ-9 | விபத்து பதிவேடு (துரையரசன்) |
| அ.சா.ஆ-10 | விபத்து பதிவேடு (விக்னேஷ்) |
| அ.சா.ஆ-11 | விபத்து பதிவேடு (ஜீவானந்தம்) |
| அ.சா.ஆ-12 | விபத்து பதிவேடு (குமரவேல்) |
| அ.சா.ஆ-13 | விபத்து பதிவேடு (அருள்கொடி) |
| அ.சா.ஆ-14 | விபத்து பதிவேடு (தமிழரசன்) |
| அ.சா.ஆ-15 | விபத்து பதிவேடு (அழகர்) |
| அ.சா.ஆ-16 | முதல் தகவல் அறிக்கை |

அ.சா.ஆ-17 மீண்டும் ஒரு முறை அ.சா.ஆ 9 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அரசுத்தரப்பு சான்றுபொருட்கள்:** இல்லை.

**எதிரிகள் தரப்பு சாட்சி , சான்றவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள்:-** இல்லை

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.27 18:59:10 +0530

அமர்வு நீதிபதி,
பட்டியில் வகுப்பினர் மற்றும் பழங்குடியினர்
(வன்கொடுமை தடுப்பு)
வழக்குகளை விசாரிப்பதற்கான
சிறப்பு நீதிமன்றம்,திருவாரூர்.